தினமலர்
உண்மையின் உரைகல்

ஜூலை 22,2013 IST

உலக தமிழர் செய்திகள்

## சிங்கப்பூரில் சமய நல்லிணக்க நிகழ்ச்சி

சிங்கப்பூர் : திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) ஜூலை 20ம் தேதி அன்று பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு மற்றும் சமய இன நல்லிணக்க நிகழ்ச்சியை நடத்தியது. சிங்கப்பூரின் ஒற்றுமை, சமய மற்றும் இன நல்லிணக்கத்தைப் பறைசாற்றிய இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இரா. தினகரன் கலந்து கொண்டார். இச்சங்கத்தின் கல்விப் பணிகளைப் பாராட்டி பேசியதுடன், சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு சமூகத் தொண்டும், சமய இன நல்லிணக்கமும், ஒற்றுமையும் மிகவும் அவசியம் என்றார். சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஆற்றி வரும் கல்விசார்ந்த சமுதாயப்பணி மிகவும் பாராட்டுக்குரியது என்று அவர் வர்ணித்தார். வரவேற்புரை வழங்கிய சங்கத்தின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர், சங்கத்தின் எதிர்கால திட்டங்களை எடுத்துரைத்தார். சங்கத்தின் செயலாளர் அப்துல் சுபஹான் நிகழ்ச்சியை வழி நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் சிங்கப்பூர் கலைப்பித்தர்கள் கழகத்தின் தலைவர் வழக்கறிஞர் கலாமோகன், சிங்கப்பூர் இந்திய வர்த்தக தொழில் சபையின் தலைவர் நாராயணமோகன், தமிழ் மொழி பண்பாட்டுக்கழகத் தலைவர் ஹரிக்கிருஷ்ணன், வளர்தமிழ் இயக்கத்தின் தலைவர் ராஜாராம், சிண்டாவின் பிரதிநிதி மோமசுந்தரம், ஜாமியா சிங்கப்பூர் அமைப்பின் தலைவர் டாக்டர் முஹம்மது ஹஸ்பி அபூபக்கர், துணைத்தலைவர் டாக்டர் ஹெச். எம். சலீம், இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் பரிஹுல்லா, சிங்கப்பூர் நாணயமாற்று வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜஹாங்கீர், தோப்புத்துறை முஸ்லிம் சங்கத் தலைவர் டாக்டர் கே.எம்.தீன், தமிழ் பட்டிமன்ற கழகத் தலைவர் யூசுப் ரஜித், முஸ்தபா தமிழ் அறக்கட்டளையின் அறங்காவலர் முஸ்தபா, காயல்பட்டின நலமன்ற மதியுரைஞர் முஹம்மது ஹசன், கீழக்கரை சங்கத்தின் செயலாளர் நிஜாமுதீன், சிங்கப்பூர் நாகூர் சங்கத்தின் செயலாளர் முஹம்மது கௌஸ், அழகியபாண்டியன், எழுத்தாளர் ஜே.எம். சாலி, எழுத்தாளர் டாக்டர் ஹிமானா சையது, கவிமாலை காப்பாளர் மா.அன்பழகன், செம்மொழி ஆசிரியர் இல்யாஸ், பென்கூலன் பள்ளிவாசலின் துணைத்தலைவர் முஹம்மது ரபீக், பி.எஸ். அப்துர்ரஹ்மான் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் சையது யூசுப் மற்றும் பல சமூகத் தலைவர்களும், பிரமுகர்களும், சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ஒற்றுமையையும், சமய இன நல்லிணக்கத்தையும் பறைசாற்றிய வண்ணம், இந்நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.